ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2195/39 - 2020 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2020.10.02

2195/39 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிர. செ. குறிப்பு இல.: ELDS/LND/04/ACQ/2014/04/-II.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2014/VE/435.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன் கோரளையில் பல்லெ பத்துவையில் தெல்லபட கிராம அலுவலர் பிரிவில் (188) தம்மெ என்னும் கிராமத்தில் அமைந்துள்ள காணி.

01. **துண்டு இல. 61; காணியின் பெயர்: கும்பல்கொட தோட்டம் பரதெனிய ஹேன்யாய பரதெனிய ஹேன; உரிமை கோருபவர்: மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை; விஸ்தீரணம்: 2.0200 ஹெக்டயார்**

வடக்கு: மு. கி. ப. 70 தெல்லபட மற்றும் துண்டு இல. 3C; கிழக்கு: துண்டு இல. 3C மற்றும் 3B; தெற்கு: துண்டு இல. 3B, 3C மற்றும் 2; மேற்கு: துண்டு இலக்கம் 2, 3C மற்றும் மு. கி. ப. 70 தெல்லபட.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு எலபாத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்

தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் அத் திகதியில் என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

பிரதேச செயலகம்,
எலபாத்த,
2020, செத்தெம்பர் 18.

10 - 645

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் கடித இலக்கம்: 13/98/PT/67.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: HIK/DS/LND/04/02/31.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹிக்கடுவை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 44 பூஸ்ஸ கிராம அலுவலர் பிரிவின் பூஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 810156 மற்றும் 2019.03.28 ஆந் திகதி அளவீட்டு வரைபட துண்டு இலக்கம் 212 மற்றும் 213 மூலம் காட்டப்பட்டுள்ள அளவிலிருந்து ஹெக்டயார் 0.101 ஐக் கொண்ட மஹகெதரவத்த இல்லை என்றால் அம்பலன்வத்த பெயரில் கீழே விபரிக்கப்படும் காணி.

01. **துண்டு இல. 212; காணியின் பெயர்: மஹ கெதரவத்த இல்லை என்றால் அம்பலன்வத்த; விஸ்தீரணம்: 0.0510 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இலக்கம் 213, 43 மற்றும் 130; கிழக்கு: துண்டு இலக்கம் 130 மற்றும் ரோஸ்கோஸ் வீதி (64); தெற்கு: துண்டு இலக்கம் 215; மேற்கு: துண்டு இலக்கம் 214 மற்றும் 213.

01. **துண்டு இல. 213; காணியின் பெயர்: மஹ கெதரவத்த இல்லை என்றால் அம்பலன்வத்த; விஸ்தீரணம்: 0.0500 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இலக்கம் 214 மற்றும் 43; கிழக்கு: துண்டு இலக்கம் 43 மற்றும் 212; தெற்கு: துண்டு இலக்கம் 212, 215 மற்றும் 214; மேற்கு: துண்டு இலக்கம் 214.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி பி.ப. 02.00 மணிக்கு ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். ஏ. யூ. ஜீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2020, செத்தெம்பர் 29.

09 - 646

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.